| O.S.No. 438/2021 | DW1: திரு. முனியபிள்ளை<br>த/பெ. திரு. முனுசாமி | 23-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. என் தந்தை முனுசாமிபிள்ளைக்கு நான், மாயப்பிள்ளை, 1–ம் வாதி சேட்டு ஆகியோர் வாரிசுகள் ஆவோம். என்னுடன் நவனீதம்அம்மாள் மற்றும் 13–ம் பிரதிவாதி அமிர்தம்மாள் ஆகியோர் சகோதரிகள். அதில் நவனீதம் அம்மாள் காலமாகிவிட்டார். நவனீதம் அம்மாளின் மகள்தான் 2–ம் வாதி கிருஷ்ணவேணி ஆவார். மேலும், நவனீதம் அம்மாளுக்கு 6, 7 பிரதிவாதிகள் மகன்கள் ஆவார்கள். அதில் மாயப்பிள்ளை 10 ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகிவிட்டார். மாயப்பிள்ளைக்கு 8 முதல் 12 பிரதிவாதிகள் வாரிசுகள் ஆவார்கள்.

2. என் தந்தை இறந்து சுமார் 20, 30 வருடம் இருக்கும். என் தந்தை உயிருடன் இருக்கும்போதே விவசாய நிலங்களை எங்கள் சகோதரர்களுக்குள் பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். எனக்கு அதில் தனித்தனியாக ஒவ்வொரு இடத்திலும் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது. மாயப்பிள்ளைக்கு மொத்தமாக 3 ஏக்கர் பாகமாக கொடுக்கப்பட்டது. எனக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதற்கு பிறகு நான் தனியாக 2 ஏக்கருக்கு மேல் சொத்து வாங்கியிருப்பேன். அதேபோல், எனது தம்பி மாயப்பிள்ளையும் சுமார் 2, 3 பம்பு செட்டுக்கள் கிரையம வாங்கியுள்ளார். நான் தனியாக வாங்கிய சொத்திலும், மாயப்பிள்ளை தனியாக வாங்கிய சொத்திலும்எந்த பிரச்சனையும் இல்லை. என் அக்கா நவனீதம் அம்மாளுக்கும், தங்கை அமிர்தம்மாளுக்கும் எந்த நிலங்களும் பாகமாக கொடுக்கவில்லை. எங்களுக்கு பாகமாக வந்த சொத்தில் எனது பெயரில் தனி பட்டாவும், மாயப்பிள்ளை பெயரில் தனிப்பட்டாவும், 1–ம் வாதி சேட்டு பெயரில் தனிப்பட்டாவும் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது சொத்திற்கான பட்டா எண். 702 ஆகும். மாயப்பிள்ளை பெயரில் உள்ள பட்டா எண். 667 என்றால் அது எனக்கு தெரியாது. சேட்டு பெயரில் உள்ள பட்டா எண். 699 என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் இதுவரையில பாகப்பிரிவினை செய்யாமல் பொதுவில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பாகப்பிரிவினை ஆகிவிட்டது. பட்டா எண். 702-ல் பாகப்பிரிவினை சொத்துக்களைத் தவிர மீதமுள்ள 2 அயிட்டங்கள்தான் சரியானது என்று சொன்னால் சரியல்ல.

4. பாகப்பிரிவினையில் எனக்கு ஒரு பம்பு செட்டு சர்வீஸுடன் வந்தது. எனக்கு பாகம் வந்தபிறகுதான் நான் சர்வீஸ் வாங்கினேன். அந்த சர்வீஸ் என் தந்தை பெயரில் உள்ளது. மாயப்பிள்ளைக்கும் கிணறு, பம்பு செட் சர்வீஸுடன் பாகம் வந்தது. 1-ம் வாதி சேட்டுவுக்கு அதேபோல் கிணறு, பம்பு செட் சர்வீஸ் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவருக்கும் கிணறுடன் கொடுக்கப்பட்டது, அதில் பம்புசெட் இல்லை, ஆனால் Oil Engine இருந்தது. 2 ஏக்கர் 60 செண்ட்டில் 60 செண்ட் 1-ம் வாதி சேட்டுவுக்கு கொடுத்துவிட்டு, மீதமுள்ள 2 ஏக்கரில் நான், சேட்டு, மாயப்பிள்ளை ஆகியோர் தலா 67 செண்ட் என பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். எனக்கு வந்த 67 செண்ட்டினை நான் சேட்டுவுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் கிரையம் கொடுக்கவில்லை, நாங்கள் இருவரும் மாற்றிக்கொண்டோம். நான் 67 செண்ட்டினை சேட்டுவிடம் ரூ.4,000/- வாங்கிக்கொண்டு அவருக்கு அக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

5. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 67 செண்ட்டிற்கு பதிலாக 7 செண்ட் வீட்டு மனையை கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. மாயப்பிள்ளைக்கு

சென்ற 67 சென்ட்டினை 1–ம் வாதி சேட்டு கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது, ஆனால் அந்த 67 சென்ட்டானது 1–ம் வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது. நான் 25.10.2021–ல் எனது மகன்கள் மற்றும் மகள் பெயரில் எழுதி வைத்த சொத்துக்கள் என் தாய், தந்தையர் பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் என்றாலும், பட்டா எனது பெயரில் உள்ளதை அனுகூலமாகக் கொண்டு நான் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளேன் என்றாலும், அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல.

6. பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையிலான கிரைய சொத்துக்களில் 1–ம் வாதி எவ்வித உரிமையும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் குடும்பத்தில் மூத்த மகன் என்பதால் தாவா சொத்துக்களுக்கான பட்டா எனது பெயரில் இருந்து வந்தது என்றால் எனது தந்தை பிரித்து கொடுத்த சொத்து என்பதால் எனது பெயரில் பட்டா இருந்தது. நான், எனது மகன்கள், மகள், பேத்தி ஆகியோர் சேர்ந்து 25.01.1995–ல் தாவா சொத்துக்களை மோசடியாக அடமானம் போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த அடமானத்தை பைசல் செய்வதற்காகத்தான் பி.சா.ஆ.6 பைசல் ரசீது எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

7. நிறைய சொத்துக்கள் உள்ள நிலையில் தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை மட்டும் எதற்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தீர்கள் என்றால் அவர்கள் வீடு கட்டுவதற்கு இடமில்லை என்று சொன்னதால் எழுதி வைத்தேன்.

8. இயலரசி என்பவர் எனது மகன் கண்ணனின் மனைவி ஆவார். இயலரசி வீட்டில்தான் உள்ளார். தாவா சொத்துக்களை ஆவணப்படுத்தவேண்டும் என்பதற்காக 05.06.2020-ல் நான் 14-ம் பிரதிவாதி இயலரசிக்கு அடமான பத்திரம் எழுதி வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல, கடன் வாங்கிக்கொண்டுதான் எழுதிக்கொடுத்தேன், அந்த கடனை இன்னும் பைசல் செய்யவில்லை. சேட்டுவும், மாயப்பிள்ளையின் வாரிசுகளும் சொத்தில் பாகம் கேட்கக்கூடாது என்பதற்காகத்தான் 14-ம் பிரதிவாதி இயலரசி பெயரில் ஆவணம் எழுதி வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

9. தாவா 1-வது அயிட்ட சொத்தில் 37 சென்ட்டில் 7 சென்ட் சேட்டுவுக்கு பாகமாக சென்றது, மீதமுள்ள 30 சென்ட் எனக்கு பாகமாக வந்தது, மாயப்பிள்ளைக்கு தெரு பக்கம் வீட்டு மனை பாகமாக ஒதுக்கப்பட்டது. தாவா 1-வது அயிட்ட சொத்தில் 1-ம் வாதிக்கு 7 சென்ட் பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த 7 சென்ட்டினை நான் பரிவர்த்தனை மூலமாக 1-ம் வாதியிடம் திரும்ப வாங்கிக்கொண்டேன் என்று சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல.

10. இந்த வழக்கில் மாயப்பிள்ளையின் வாரிசுகள் எதிர்வியாஜ்ஜியம் செய்யவில்லை என்றால் சரிதான். மாயப்பிள்ளையின் மகன் சாரங்கன் சாட்சி சொல்ல வரும்போது நான்தான் தடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல, எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தையே இல்லை. பட்டா எனது பெயரில் இருந்ததைக் கொண்டு கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து மோசடி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

11. தாவா சொத்தில் எனக்கும் என்னுடன் பிறந்தவர்களுக்கும் சேர்த்து தலா 5-ல் 1 பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நவனீதம் அம்மாளின் பாகத்தைப் பொறுத்து 2-ம் வாதி கிருஷ்ணவேணியும், 6, 7 பிரதிவாதிகளும் அடையவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், மாயப்பிள்ளைக்கு உண்டான 5-ல் 1 பாகத்தை 8 முதல் 12 பிரதிவாதிகள் அடையவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், அமிர்தம் அம்மாளுக்கும் 5-ல் 1 பாகம் உரிமை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.23 12:48:04 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**